FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319496

1. District : மாவட்டம் Salem PS: காவல்நிலையம் V&AC, Salem Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 19/AC/2025 Date: நாள் 15.10.2025

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a), 12
(ii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: r/w 106
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 15.10.2025 at about 13.15 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2025 Time : நேரம் 22.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Collection of Sources.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Sub-Registrar office, Valapadi, Salem District. Approximately 34 Km - East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Murugan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. Sivaraj
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspector of Police (g) Address : முகவரி Vigilance and Anti-Corruption, Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. J. Nalina, Assistant, Incharge Sub-Registrar, Valapadi, Salem District.
2) Tr. M. Senthilkumar S/o. Murugesan, Assistant of Document Writer Vasudevan, Athur, Salem.
3) Tr. M. Vijay S/o. Murugesan, Assistant of Document Writer Muthamilselvan, -Amman Kovil St, Kuppanur, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet are enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.10.2025 09.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Murugan
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.19/AC/2025 106 BNSS r/w ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7(a), 12 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12ன் விபரம்.

15.10.2025 ஆம் தேதி மதியம் 01.15 மணிக்கு காவல் ஆய்வாளர் S.முருகன் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யவரும் பொதுமக்களிடம் முறையற்ற வகையில் பத்திரம் பதிவு செய்வதற்காக புரோக்கர்கள் மூலமாக சார்பதிவாளர் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின்பேரில் திரு.ச.சிவப்பிரகாசம், மண்டல துணை வட்டாட்சியர், சேலம் வட்டாட்சியர் அலுவலகம், அஸ்தம்பட்டி, சேலம், திரு.தியாகு, வருவாய் ஆய்வாளர், சேலம் நகர குறுவட்டம், சேலம் வட்டம், சேலம் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் இணைந்து 15.10.2025 ஆம் தேதி பிற்பகல் சுமார் 15.30 மணியளவில் வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையின்போது வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த திரு.மு.செந்தில்குமார், த/பெ.முருகேசன், 314, ராமநாயக்கன்பாளையம், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் (உதவியாளர், வாசுதேவன் பத்திர எழுத்தர் அலுவலகம், ஆத்தூர், சேலம்) என்பவரிடம் இருந்து ரூ.22,000/-மும், திரு.மு.விஜய், த/பெ.முருகேசன், 4/73, அம்மன் கோவில் தெரு, குப்பனூர், சேலம் வட்டம், சேலம் (உதவியாளர், முத்தமிழ்செல்வன் பத்திர எழுத்தர் அலுவலகம், அயோத்தியாபட்டிணம், சேலம்) என்பவரிடம் இருந்து ரூ.35,000/- மும் மற்றும் சார்பதிவாளர் அலுவலக ஹாலின் வடகிழக்கு மூலையிலுள்ள முதல் மாடிக்கு செல்லும் மாடிப்படியை பார்த்தபோது, அந்த மாடிப்படியின் இரண்டாவது படிக்கட்டில் வெளிர் பிஸ்கட் நிற சிறிய சனல் பை ஒன்று மடித்து வைக்கபட்ட நிலையில் இருந்தது. அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து பார்க்கையில் 500 ரூபாய் நோட்டுகள் மூன்று கட்டுகளாக காணப்பட்டது. அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்கையில், அதில் இரண்டு கட்டுகளில் தலா 100 என்ற எண்ணிக்கையிலும், ஒரு கட்டில் 40 என்ற எண்ணிக்கையிலும் மொத்தம் ரூபாய் 1,20,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,77,000/- க்கு அவர்கள் சரியான விளக்கம் அளிக்காததாலும் மற்றும் மேற்படி தொகைகள் வைத்திருந்த விதம் வாழப்பாடி சார்பதிவாளர் திருமதி.ஜெ.நளினா அவர்களுக்கு அவர் அலுவல் பணியை முறையற்றவகையில் செய்ததற்காக தேவையற்ற அனுகூலமாக கொடுப்பதற்கான பணம் என நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும்,

சந்தேகத்திற்குரியதாக இருந்ததாலும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. மேற்படி நடவடிக்கையின்படியும், இதர ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் 1) திருமதி.ஜி.நளினா, க/பெ.(லேட்)கதிரவன், சார்பதிவாளர் வாழப்பாடி, 2) திரு.மு.செந்தில்குமார், த/பெ.முருகேசன், 314, ராமநாயக்கன்பாளையம், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் மற்றும் 3) திரு.மு.விஜய், த/பெ.முருகேசன், 4/73, அம்மன் கோவில் தெரு, குப்பனூர், சேலம் வட்டம், சேலம் ஆகியோர் மீது ச/பி.7(a), 12 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 r/w 106 BNSS ன்படி 15.10.2025 மாலை 22.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், 15.10.2025 ஆம் தேதியிட்ட செயல்முறைகள் (Proceedings), கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,77,000/- ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, சேலம் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

15/10/2025

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.